# வலம்புரி

பக்கங்கள் ஆறு

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 16 திங்கட்கிழமை (28 - 02 - 2000) *VALAMPURI* ஒலி: 71



யாழ்ப்பாணம்/


## அன்ரன் பாலசிங்கம் - வொலிபேக் சந்திப்பு

# தமிழ்பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ள இராணுவம் வெளியேற வேண்டும்!

## அரசியல் ஆலோசகர் வலியுறுத்து

(இலண்டன்)

**தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை, பொருளாதாரத் தடை, யுத்தத் திணிப்பு என்பன அகற்றப்பட்டு பரஸ்பர நம்பிக்கை, நல்லெண்ணம் ஏற்பட அரசு உடனடியாக யுத்தநிறுத்தம், மோதல்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

**யுத்தமற்ற ஓர் சூழ்நிலையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் ஆரம்பிக்கவேண்டும்.**

இவ்வாறு நோர்வே வெளிநாட்டமைச்சர் நட்வொலிபேக்கிடம் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் வொலிபேக் அன்ரன் பாலசிங்கத்தை நேற்று முன்தினம் சனிக்கிழமை ஐரோப்பிய நாடொன்றின் தலைநகரில் சந்தித்து பேசியுள்ளார் இச்சந்திப்பு சுமார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை தீர்வில் புலிகளுடன் பேசி எடுக்கும் முடிவே உறுதியானது

### மாவை சேனாதிராசா எம். பி.

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடன் நடாத்திய மூன்று கட்டப் பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்களும் இணக்கம் காணப்படாத பல விடயங்களும் நேற்று நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச்சபைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உப தலைவர் ஆனந்த சங்கரி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. காலை பத்து மணிக்கு ஆரம்பமான இக்கூட்டம் மாலை 4-00 மணி வரை நீடித்தது.

பொதுச்சபைக் கூட்டத்தின் பின் த. வி. கூ, தேசியப் பட்டியல் எம்.பி. மாவை. சோனாதிராசா வலம்புரிக்குத் தகவல் தருகையில் தமிழ்க் கட்சிகளின் முன்மொழிவுகளாக சேர்த்துக் கொள்ளப்பட்ட தமிழ் முஸ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் சமாதான ஆர்ப்பாட்ட பேரணி இன்று!

(ஏறாவூர்)

நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டும் என்று கோரி இன்று மட்டக்களப்பில் ஈ. பி.டி.பி.,ரெலோ, புளொட் ஈ. பி. ஆர், எல். எவ் ஆகிய அமைப்புக்களும் பொது அமைப்புக்களும் இணைந்து நடத்தும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது,

சமாதான பேச்சு நடத்த வேண்டும், நோர்வே அரசின் உதவியுடனான சமாதான முயற்சிகளை சீர்குலைக்க முற்படும் பேரினவாத சக்திகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை அரசு எடுக்க வேண்டும், ஆளும் எதிர்க்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புகையிரத நிலைய அதிபர்கள் இன்று வேலைநிறுத்தத்தில் குதிப்பர்!

(கொழும்பு)

புகையிரத நிலையஅதிபர்கள் சங்கம் இன்று நள்ளிரவு 12 மணிமுதல் அடுத்தமாதம் 2ம் திகதி நள்ளிரவு 12மணி வரையிலான நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளனர்.

சம்பள உயர்வு 1996ம் ஆண்டு சம்பள நிலுவை போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே அதிபர்கள் சங்கம் இவ் வேலை நிறுத்தத்தை மேற்கொள்ள உள்ளது.

நாடுதழுவிய இவ் வேலை நிறுத்தத்தில் 950 புகையிரத

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றில் ஆஜர்

(வவுனியா)

கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 18 மீனவர்களும் இன்று புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை இம்மீனவர்களை விடுவிக்க புளொட் அமைப்பின்தலைவரும்வன்னி மாவட்ட எம். பியுமான த, சித்தார்த்தன் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது, (வ. 103)

## 4 ஆம் கட்ட பேச்சு இன்று

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையே அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான 4 ஆம் கட்டப் பேச்சுவார்த்தை இன்று அலரி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் பேச்சுவார்த்தையில் தமிழர் விடுதலைக்கூட்டணி, புளொட், ஈ. பி. டி. பி., ரெலோ ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளார்கள். (வ-6)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

பல மோதல் சம்பவங்களின் போது தமது தரப்பில் உயிரிழந்தோர்களின் பெயர் விபரங்களை விடுதலைப்புலிகள் வெளியிட்டுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:

★ கப்டன் கோணேஸ் (தங்கராஜா - கஜேந்திரன்) யாழ்ப்பாணம்.

★ மேஜர் முத்துக்குமார் (சின்னத்துரை - நாதன்) யாழ்ப்பாணம்.

வீரவேங்கைகளான

★ கோமலதன் (கன்னிப்பொடி - தேவதாஸ்)

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இளம்பெண் படையினரால் கைது மனித உரிமைஆணைக்குழுவில் முறையீடு

(வவுனியா)

வவுனியாவில் தனியார் மருத்துவமனையில் கடமை புரியும் இளம் பெண் ஒருவர் கடந்த வெள்ளி பகல் பாதுகாப்பு படையால் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக கொழும்புக்கு உடன் கொண்டு செல்லப் பட்டுள்ளார்.

இராசையா தேன்மொழி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### உண்ணாவிரதிகளைப் பார்வையிட

## வன்னி சென்ற உறவினர்கள் இன்று தென்பகுதி செல்வர்

(கொழும்பு)

வன்னியில் உண்ணாவிரதமிருந்த படையினரைப் பார்வையிடுவதற்காக அங்கு சென்ற அவர்களது உறவினர்கள் மீண்டும் இன்று தென்னிலங்கை திரும்புகின்றார்கள்.

இவர்கள் கடந்த 22ம் திகதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு இராணுவத்தைப் பயன்படுத்தி மக்களின் சொத்தை அழிக்கிறது

### கைதிகளின் உறவினர் தெரிவிப்பு

(வவுனியா)

அநியாயமான முறையில் அரசு பொதுமக்களுடைய சொத்துக்களை அழிக்கின்றது இதனை நாம் நேரில் கண்டோம்.

இவ்வாறு வன்னியில் உண்ணாவிரதமிருக்கும் புத்தக் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்

[6 ஆம்பக்கம் பார்க்க]

### திருமலையிலிருந்து மீண்டும்

## ஆயிரத்து இருநூறு பயணிகளுடன் லங்கா முடித்த காங்கேசன் வரும்

(திருகோணமலை)

பயணிகளை ஏற்றிக் கொண்டு நேற்று காங்கேசன் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட லங்காமுடித்த கப்பல் இன்று காலை திருகோணமலையைச் சென்றடையும்.

இதேவேளை அயிரத்து இருநூறுபயணிகளை திரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மேயர், வலி வட பிர. தலைவர் நியமனம் உடனடியாக இல்லை!

(கொழும்பு)

வெற்றிடமாகவுள்ள யாழ். மாநகர சபையின் மேயர் வலி வடக்கு பிரதேசசபைத் தலைவர் பதவிகளுக்கு உடனடியாக எவரையும் நியமிப்பதில்லை என தமிழர் விடுதலைக்கூட்டணியின் பொதுச் சபை தீர்மானித்துள்ளதாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### ஆடு விற்பனைக்குண்டு

நல்லின யமுனாப்பாரி கடாக்கள், மற்றும் மறிக் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு S. P. தாஸன், இல 75, செட்டித்தெரு, நல்லூர். [97]

### ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

சகல விதமான ஓவிய வேலைகள் பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள் பாட சாலைச் சின்னம், கீற்ரேக் ஆகியவற்றை செய்திட S. S. யசோதரன் ஆட்ஸ் 185, கஸ் தூரியார் வீதி, யாழ்ப் பாணம். (கி-030)


# பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு இம் மாதம் 27 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செய லர் ரீதியாகத் தரப்படுகின் றது.

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 129991 ஏ | 131235 ஏ |
| 131235 பி | 13 235 சி |
| 131235 டி | 13 240 ஏ |
| 131240 பி | 131248 ஏ |
| 131248 பி | 131248 சி |
| 131262 ஏ | 131262 பி |
| 131262 சி | 131262 டி |
| 131262 ஈ | 131282 ஏ |
| 131282 பி | 131282 சி |
| 131363 ஏ | 131363 பி |
| 131365 ஏ | 131365 பி |
| 131408 ஏ | 131408 பி |
| 131408 சி | 131426 ஏ |
| 131426 பி | 131426 சி |
| 137418 ஏ | 137418 பி |
| 130504 ஏ | 130504 பி |
| 131453 ஏ | 131453 பி |
| 131456 ஏ | 135443 ஏ |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 131950 ஏ | 132083 ஏ |
| 132083 பி | 132083 சி |
| 132158 ஏ | 132158 பி |
| 132158 சி | 132158 டி |
| 132207 ஏ | 132256 ஏ |
| 132256 பி | 132256 சி |
| 132256 டி | 132256 ஈ |
| 132270 ஏ | 132270 பி |
| 132277 ஏ | 132299 ஏ |
| 132299 பி | 132362 ஏ |
| 132362 பி | 132362 சி |
| 132362 டி | 132378 ஏ |
| 132378 பி | 132389 ஏ |
| 137015 ஏ | 137015 பி |
| 137015 சி | 137015 டி |
| 137052 ஏ | 137064 ஏ |
| 137072 ஏ | 137094 ஏ |
| 137116 ஏ | 137117 ஏ |
| 137122 ஏ | 137122 பி |
| 137122 சி | 137253 ஏ |
| 137284 ஏ | 137287 ஏ |
| 137287 பி | 137341 ஏ |
| 137374 ஏ | 138714 ஏ |

### கரவெட்டி

| | |
|---|---|
| 132271 ஏ | 132271 பி |

### நல்லூர்

137342 ஏ

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(நாவற்குழி)

யா/ நாவற்குழி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க் கிழமை வித்தியாலய அதிபர் பி. முத்துலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது,

யாழ். மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் சி. நடராஜா போட்டியின் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(செ-45)

★ ★ ★

(அச்சுவேலி)

யா/புனிததெரேசாள் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பி.ப. 1.30மணிக்கு, அதிபர் அருட் செல்வி எம். எத்தல்வீவா தலைமையில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ-57)

★ ★ ★

(செம்பியன்பற்று)

யா/ ஆழியவளை சி. சி. த. க. வித்தியாலயம் யா/ செம்பியன் பற்று றோ.க.த. பாடசாலை ஆகிய வற்றின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பி. ப. 2 மணிக்கு சென்பிலிப்றோஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ச. திரவியராசா தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் வி. ப. வேலாயுதபிள்ளை முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(செ-42)

# (இராசி பலன்)

28.02.2000
திங்கட்கிழமை
(தமிழுக்கு மாசி - 16)

நவமி அதிகாலை 3.23 வரை, கேட்டை மாலை 7.52 வரை, கரிநாள், இராகு காலம் காலை 8.29 முதல் 9.57 வரை, சுபநேரம் பகல் 12.56 முதல் 2.54 வரை.

**மேடம்:**
வைராக்கியம், அமைதிக் குறைவு, தொழில் கஸ்டம்.

**இடபம்:**
எதிர்பாராத நன்மை, தரிசனம், நண்பர் வரவு.

**மிதுனம்:**
காரியசித்தி, தாய்ப்பாசம், விருந்தோம்பல்.

**கடகம்:**
ஞாபகமறதி, வாக்குப் பகை, பணமுடை.

**சிங்கம்:**
வீண்பிரயாசம், தப்பபிப் பிராயம், குற்ற உணர்வு.

**கன்னி:**
காலதாமதமுடிவு, அதிகாரிகள் சந்தேகம், வெறுப்பு.

**துலாம்:**
சகோதர உதவி, தொழில் லாபம், பயண அனுகூலம்.

**விருச்சிகம்:**
வேண்டாதபணி, வாய்ப்பு நழுவுதல், மனச்சுமை.

**தனுசு:**
பணியாள் கவலை, தனிமைப்படல், யோசனை.

**மகரம்:**
பெண் அறிவுரை, திட்டமிடல், அறிஞர் ஆசியுரை.

**கும்பம்:**
தொழில்பாராட்டு, நற்செய்தி, சுபகாரியம்.

**மீனம்:**
பொருள் இழப்பு, குடும்ப வேற்றுமை, மாமனார் கோபம்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

# வீதி திருத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை புனித நீக்கிலாஸ் தேவாலய வருடாந்த உற்சவம் அண்மையில் வரவிருப்பதாலும் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டமும் இடம்பெற உள்ளது.

இத்தேவாலய சுற்றாடல் வீதிகளான நாவலர் வீதி முஸ்லிம் கல்லூரி வீதி, காதி அபூபக்கர் வீதி, கடற்கரை வீதி, ஆகியன குன்றும் குழியுமாக உள்ளது.

இவ் வீதியை உடன் செப்பனிட ஆவன செய்யுமாறு மாநகரசபை கூட்டணி உறுப்பினர் செ. விஜயரத்தினம் ஆணையாளரையும், பதில் மாநகரசபை முதல்வரையும் கேட்டுள்ளார். (க)

# உதைபந்தாட்டப் போட்டி

(கரணவாய்)

யாழ். மாவட்டப் பாட சாலைகளுக்கிடையேயான 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி. ப. 2. 30 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நெல்லியடி மத்திய மகவித்தியாலயத்தை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மோதுகின்றது.

(செ-27)

# நல்லூர் பி.செயலக உதைபந்தாட்ட போட்டி

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப்போட்டியின் இறுதியாட்டம் இன்று திங்கட்கிழமை யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

1ஆவது ஆட்டத்தில்கோண்டாவில் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

2ஆவது ஆட்டத்தில் திருநெல்வேலி கலாமன்ற விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நொதேன் விளையாட்டுக்கழக்ம் மோதவுள்ளது.

இவ் விளையாட்டுக்கழகங்களில் வெற்றிபெறும் அணிகளின் இறுதியாட்டம், மார்ச் 1ஆம்திகதி புதன்கிழமை யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

(செ-22)

# சந்தேகநபர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையில் படையினர் நடத்திய சுற்றிவளைப்பு, தேடுதலின் போது நீண்ட காலமாகத் தேடப்பட்டுவந்த விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாகப் படைவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வாகரைப் பிரதேசத்தின் அநேகமான பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (க-60)

# விளையாட்டுப் போட்டி

நெடுந்திவு கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி கடந்த வெள்ளிக் கிழமை, நெடுந்திவு மகாவித்தியாலய விளையாட்டுமைதானத்தில் கோட்டக் கல்வி அதிகாரி க. அரசரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

([illegible])

# வீதி திருத்தம்

கடந்த பல ஆண்டுகளாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்பட்ட நல்லூர் வைமன் வீதி தற்பொழுது யாழ். மாநகர சபையினரால் துரிதமாக திருத்தப்பட்டு வருகின்றது.

(க-76)


## இன்னும் இரு தினங்கள் மட்டும் இனாம்

பாடசாலை மாணவிகளுக்கும்
அலுவலகப் பெண்களுக்கும்

அரிய சந்தர்ப்பம்

*CURVFORM & CORINA BRASSIERS*

ஒவ்வொன்றுக்கும் ஒரு பெறுமதியான

(டயறி இனாம்)

லிங்கன் ஸ்ரோர்ஸ்
168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி — 3368 (கி/91)


# சாவகச்சேரி நகரசபை பகிரங்க ஏலவிற்பனை

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக் கடைகள் 1-3-2000 ஆம் திகதி தொடக்கம் 31-12-2000ம் திகதி வரைக்கான காலப்பகுதிக்கு குத்தகைக்கு எடுத்து நடாத்துவதற்கான பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும். ஏல விற்பனை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 01-05-2000ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு நடைபெறும்.

ஏல விற்பனையில் கடையை எடுத்து நடத்துவோர் கேள்வித் தொகையில் 1/3 பகுதியை முற்பணமாகச் செலுத்துவதுடன் பாதுகாப்பு வைப்புப் பணமாக ரூ 1000/-ஐ இவ்வலுவலகத்தில் செலுத்த வேண்டும்,

கேள்வித் தொகையின் மிகுதித் தொகையை எட்டு சம பங்குகளாகப் பிரித்து செலுத்த வேண்டும்.

| கடை இல | ஆரம்ப கேள்வித் தொகை |
|---|---|
| 01. ஆட்டிறைச்சிக் கடை இல. 1 | ரூ 55000.00 |
| 02. ஆட்டிறைச்சிக் கடை இல. 2 | ரூ 62000.00 |
| 03. மாட்டிறைச்சிக் கடை இல. 3 | ரூ 66000.00 |
| 04. மாட்டிறைச்சிக் கடை இல. 4 | ரூ 70000.00 |

மு. செ. சரவணபவ
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
24-2-2000

(கி 78)

# யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

23-2-2000 நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 2000 ஆண்டுக்கான நிர்வாக, நிர்வாகசபை, உத்தியோகத்தர்களின் பெயர்

தலைவர்:- திரு. தம்பிப்பிள்ளை சற்குணராசா
உபதலைவர்:- திரு. இரத்தினம் சிவலிங்கம்
செயலாளர்:- திரு. கந்தையா விசுவலிங்கம் குலரத்தினம்
உபசெயலாளர்:- திரு. வேலுப்பிள்ளை முத்துலிங்கம்
பொருளாளர்:- திரு. குமாரசாமி தர்மராசா

### நிர்வாகசபை உறுப்பினர்கள்

திரு. இராசையா ஜனக்குமார்
திரு. கந்தையா மகாதேவசிவம்
திரு. திருநாவுக்கரசு சிவதாஸன்
திரு. கந்தையா கனகசபாபதி
திரு. பேரம்பலம் நாகரத்தினம்
திரு. கார்த்திகேசு நித்தியானந்தன்
திரு. வைத்திலிங்கம் நமசிவாயம்
திரு. கணபதிப்பிள்ளை பரம்சோதி
திரு. குமாரசாமி கங்கைவேணியன்
திரு. நமசிவாயம் சிவகுமார்
திரு. இரத்தினலிங்கம் ஜெயசேகரம்
திரு. தம்பையா சங்கரப்பிள்ளை
திரு. ஆறுமுகம் குணரட்னம்
திரு. ஐயாத்துரை சச்சிதானந்தம்

(கி;99)

## வவு. தமிழ்க் கைதிகள் 12 பேர் தடுத்து வைப்பு!

(வவுனியா)

வன்னி இராணுவத்தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 தமிழ்க்கைதிகளை வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி எஸ். சிறிதரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

வவுனியாவின் பல் வேறு இடங்களிலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மேற்படி 12 பேருமே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இந்தத் தடுப்பு முகாமில் 4 இராணுவத்தினரும் காவலில் உள்ளதாகவும் சிறிதரன் தெரிவித்தார்.

## வன்னி ஆஸ்பத்திரிகளில் முக்கிய மருந்துகள் இல்லை

(வவுனியா)

வன்னிப் பிரதேச வைத்தியசாலைகளில் ஊசி மருந்து உட்பட பல அத்தியாவசிய தேவைக்குரிய மருந்துகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது வன்னியிலுள்ள வைத்தியசாலைகளுக்கு ஒரு நாளைக்குப் போதுமான மருந்துகளே பாதுகாப்பு அமைச்சினால் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சிடம் மருந்துகளை உடன் அனுப்பி வைக்குமாறு வைத்தியசாலை வட்டாரங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. (வ-102)

## மட்டக்களப்பு - தாழங்குடாவில் வயோதிபரின் சடலம் கரை ஒதுங்கியது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாழங்குடாவில் வயோதிபர் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது. மேற்படி சடலத்தை காத்தான்குடி பொலிஸார் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி கா. தட்சணாமூர்த்தி மேற்படி சடலத்தின் மரணவிசாரணையை மேற்கொண்டார். இம் மரணம் நீரில் மூழ்கியதால் மூச்சுத்திணறி ஏற்பட்டது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வாறு மரணமடைந்தவர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சாரதி அ. இராஜேந்திரா (வயது60) என அடையாளங்காணப்பட்டுள்ளது.

வீட்டில் ஏற்பட்டதகராறு காரணமாக மேற்படிநபர் கடலில் வீழ்ந்திருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (க-60)

## கடற்படையினரின் நடவடிக்கைகள் கல்விச் செயற்பாட்டை குழப்புகின்றன

(ஊர்காவற்றுறை)

யாழ். வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் அங்கு குடி கொண்டுள்ள கடற்படையினரின் நடவடிக்கை காரணமாக சுதந்திரமான கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக பாடசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

மேற்படி பாடசாலை விடுதியில் முகாம்அமைத்துத் தங்கியுள்ள கடற்படையினர் பாடசாலை செல்லும் மாணவர்களை சோதனையிடுவதுடன் அடையாள அட்டையை பரிசோதித்தல் மற்றும் ஆசிரியர்களை சோதனையிடுவதுடன் அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்டு பாடசாலைக்குள் நுழைய வேண்டும்.

பாடசாலைக்குச் செல்லும்

★புதியவர்களை சோதனைச் சாவடி சென்று அதிபர் அழைத்துவர வேண்டும்.

★பாடசாலைக்கு 500மீற்றர் தொலைவில் உள்ள சோதனைச் சாவடியில் துவிச்சக்கரவண்டியை நிறுத்தி விட்டு நடந்து செல்ல வேண்டும்.

★பாடசாலையின் சகல நிகழ்வுகளுக்கும் கடற்படையினரின் முன் அனுமதி பெறுதல் வேண்டும்.

மாணவர்கள் ஆசிரியராகியோர் காலை 8 மணிக்கு முன்பும் பகல் 2-30 இற்குப் பின்னும் பாடசாலையில் நிற்கக்கூடாது.

★பாடசாலை மேல்மாடிக் கட்டடம் முன்பாகவுள்ள மைதானம் என்பவை பாவிக்கக்கூடாது. போன்ற பல் வகையான தடைகளை விதித்துள்ளனர்.

இதனால் மேலதிக வகுப்புகள் விளையாட்டுப் பயிற்சிகள் என்பனவற்றை மேற்கொள்ள முடியாதிருப்பதுடன் இவைகள் பாடசாலையின் வளர்ச்சிலேயே பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி வருவதாக சம்பந்தப்பட்டோர்தெரிவித்துள்ளனர். (க-75)

## இளைஞன் படையினரால் அழைக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த தம்பிரத்தினம் ரஜிகாந்தன் (21 வயது) என்னும் இளைஞன் கடந்த 24 ஆம் திகதி அன்று ஊரெழு இராணுவத்தினரால் அவரது வீட்டில்வைத்து விசாரணைக்காக அழைத்துச்செலலப்பட்டுள்ளார்.

இவர் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டமை குறித்து பற்றுச்சீட்டும் பெற்றோரிடம் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஊரெழு இராணுவ முகாமில் இவர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இவரது நிலைமைதொடர்பாக வடபிராந்திய மன்ற இணைப்பாளர் ஜ. சிவராசாவிடம் முறையிடப்பட்டுள்ளது. (க)

## பொதுக்கூட்டம்

அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம் பெறவுள்ளது (க-23)

## மட்டு. செங்கலடி பதுளை வீதியில் ராஸிக்குழு விடுதலைப்புலிகள் மோதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி பதுளை வீதியில் கொடுவாமடுவிற்குச் சென்றுகொண்டிருந்த ராஸிக் குழுவிற்கும், விடுதலைப் புலிகளிற்கும் இடையிலேற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்துள்ளதாகவும் ராஸிக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்ட, காயம் அடைந்த உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் தூக்கிச் சென்று விட்டதாகவும் மேலும் தெரிவித்தனர்,

ராஸிக் குழுவினருக்கு உதவியாகச் சென்ற இராணுவத்தினர் புலிகளின் இருப்பிடங்களை நோக்கி எறிகணைத் தாக்குதலை நடாத்தியுள்ளனர். (க 60

## அகதிகளுக்கான பண உதவியை பிரிட்டிஷ் அரசு நிறுத்த முடிவு

(இலண்டன்)

அகதிகளுக்கென இதுவரையில் வழங்கப்பட்டுவந்த பண உதவியை நிறுத்துவதென பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அச்செய்திகள் மேலும்தெரிவிக்கையில்; ஆசிய மற்றும் ஆபிரிக்காபோன்ற நாடுகளிலிருந்து பிரிட்டனுக்கு வரும் அகதிகளின் எண்ணிக்கை சமீபகாலமாக வெகுவாக அதிகரித்து வருகின்றமையே பிரிட்டனின் மேற்கண்டமுடிவிற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இவ் அகதிகள் உண்மையில் அரசியல் அகதிகள்அல்லர் என்றும் தத்தம் நாடுகளில் நிலவும் அசாதாரண நிலையை பயன்படுத்தித் தமது பொருளாதார நிலையை மேம்படுத்தும் விதமாகவே இவ்அகதிகள் இலண்டன்வருவதாக பிரிட்டன் அமைச்சரவை மட்டத்தில் கருததுக்கள் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில்பிரிட்டனின் மேற்கண்ட முடிவையடுத்து ஜேர்மன், பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற மேற்கு ஐரோப்பியநாடுகளும் கூட, அகதிகள் விடத்யதில் கடும்போக்கை கடைப்பிடிக்க கூடும்என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## நேபாள அரசாங்கத்துடன் பேச்சுநடத்த தீவிரவாதிகள் இணக்கம் தெரிவிப்பு

(காட்மண்டு)

நேபாள அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அந்நாட்டு மாவோவாத தீவிரவாதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மாவோவாத கொம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் விடுத்த அறிக்கையில்,

பேச்சுவார்த்தைகளுக்கான முன் நிபந்தனையாக அதற்கான நல்லதோர் சூழலை உருவாக்க வேண்டியது நேபாள அரசின் கடமையாகும் எனத்தெரிவித்துள்ளார்.

மாவோவாத அரசியல் பீடத்தின் 3 உறுப்பினர்களை சமாதான பேச்சுவார்த்தைகளில் இணைக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும்,

மாவோவாத இராணுவ பீடத்தினர் பேச்சுவார்த்தைகள் பற்றியோ அல்லது இராணுவ நடவடிக்கைகளை அதன் பொருட்டு இடைநிறுத்துவது பற்றியோ இன்னமும் ஏதொரு கருத்தும்வெளியிடவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

## உள்ளூர் சட்டத் தரணிகள் பணிகள் பலநாட்களாக தொடர்ந்து நிறுத்தம்

(புதுடில்லி)

வெளிநாட்டைச் சேர்ந்த சட்டத்தரணிகள் இந்தியாவில் கடமையாற்றலாம் எனும் இந்திய அரசின் சட்டத்தை தொடர்ந்து பல நாட்களாக உள்ளூர் சட்டத்தரணிகள் தமது பணிகளை இடைநிறுத்தி உள்ளனர்.

மேற்படி சட்டத்தினை எதிர்த்து உள்ளூர் சட்டத்தரணிகள் மேற்கெண்ட ஆர்ப்பாட்டங்களில் பொலிஸாருக்கும் சட்டத்தரணிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களில் 60 பேர் காயம் அடைந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-9)

## புவியின் வெப்பநிலை அதிகரிப்பது குறித்து சூழலியலாளர்கள் பெரும் கவலை

(வாஷிங்டன்)

புவியின் வெப்பநிலை அதிகரித்து வருவது குறித்து சூழலியலாளர்கள் பெரிதும் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த நூறு ஆண்டுகளில் 25 வருடத்திற்கு இரண்டு பாகை செல்சியஸ் என்ற சராசரி அளவில் புவியின் வெப்பநிலை அதிகரித்துள்ளது என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பெற்றோலிய எரிபொருட்கள், நிலக்கரி, எரிவாயு போன்றவற்றின் அதிகரித்தபாவனை என்பன சூழல் வெப்பம் அடைதலுக்கு முக்கிய காரணிகளாக அமைவதாக சூழலியலாளர்கள் தெரிவித்துள்ளனர். [க-9]

## பிரான்ஸ்- இந்திய கடற்படையின் ஒத்திகை நிகழ்வு நாளை இடம்பெறும்

(புதுடில்லி)

இந்தியக்கடற்படையினரும் பிரான்ஸ் கடற்படையினரும் கூட்டாக இணைந்து, அரேபியக் கடற்பரப்பில் கடற்படை ஒத்திகை ஒன்றினை நடாத்தவிருப்பதாக இந்தியத்தரப்புச்செய்திகள் தெரிவித்துள்ளன.

நாளைய தினம் ஆரம்பமாகவுள்ள கடற்படை ஒத்திகைக்கு, பிரான்ஸின் விமானந்தாங்கிக் கப்பலான வோஜ்நலைமை தாங்கும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இந்த இருநாள் கடற்படை ஒத்திகையின் போது நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு எதிரான பிரச்சினைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும் எனவும்.

இந்திய தரப்பின்10யுத்தக் கப்பல்கள் இந்த பயிற்சியில் ஈடுபடுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் அடுத்த மாதமளவில் இந்திய-சிங்கப்பூர் நாடுகள் இணைந்து வங்காள விரிகுடாவில் மற்றொரு 10நாள் கடற்படை ஒத்திகையை நடாத்த இருக்கின்றன.

இது இருநாடுகளுக்குமான இரண்டாவது கடற்படை ஒத்திகை என்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

## உலக வலம்

## முஸ்லிம் நாடுகள் தமக்கென ஒரு சர்வதேச படையை உருவாக்க வேண்டும்

(இஸ்லாமபாத்)

முஸ்லிம் நாடுகள் ஒன்றுபட்டு செச்சினியாவை அங்கீகரிப்பதோடு அவை தமக்கென்று ஒரு சர்வதேச படையையும் உருவாக்கவேண்டும் என செச்சினியாவின் முன்னாள் ஜனாதிபதி ஸெலிம் கான் யந்தார் பியேவ் முஸ்லிம் நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இஸ்லாமபாத்தில் கலந்துரையாடல் ஒன்றில் பங்கு பற்றிய வேளையில் இக் கருத்தை வெளியிட்ட யந்தார் பியேவ்,

ரஷ்யாவின் அடக்குமுறையாலும் இனப்படுகொலையாலும் பாதிக்கப்பட்டுள்ள செச்சினியர்களின் சுதந்திரத்தை அங்கீகரிப்பது, செச்சினியாவிலுள்ள தமது சகோதரர்களுக்கு முஸ்லிம் உலகம் புரியும் பேருதவியாகும் என்றும் தெரிவித்தார்.

செயற்பாடு மூலம் உலகில் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

முஸ்லிம் நாடுகள் இதைச் செய்யத் தவறினால் செச்சினியாவில் மட்டுமல்ல கொஸோவாவிலும் காஷ்மீரிலும் முஸ்லிம்கள் தொடர்ந்தும் அடக்குமுறைக்கு உட்படும் அபாயம் தோன்றும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (க-9)

# உற்பத்திப் பொருள்களுக்கு சந்தைவாய்ப்பின்றி திணறும் யாழ்ப்பாண விவசாயிகளின் பரிதாபம்

## வரவு - செலவுத்திட்ட உரையில் தவராசா எம். பி.

(கொழும்பு)

யாழ். விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாது திணறுகிறார்கள். தமது வெங்காய உற்பத்தியை கொழும்பிற்கு சந்தைப் படுத்தமுயன்றும் அதுவெற்றி யளிக்கவில்லை. இது குறித்து தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

மேற்கண்டவாறு ஈ. பி. டி. பி.பாராளுமன்ற உறுப்பினர் தவராசா பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு—செல்வுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் பிரஸ்தாபிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட உரையின் மூலப் பொருளை ஒருவர் உற்று நோக்கும்போது, அரசியல் தீர்வின் மூலம் இனப் பிரச்கினைக்கான தீர்வின் அவசியத்தை அது வலியுறுத்துகின்றது. பாதுகாப்பு செலவீனங்களுக்கு எமது வளத்தில் பெரும்பாலான பங்கு பாவிக்கப்படும் போது எமது வளங்களை மக்களின் நலன்களுக்காக முழுமையாக பாவிக்க முடியாதிருக்கின்றது என்பதனையும்.மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் தனது உரையில் ஏற்றுக் கொண்டுள்ளார்.

உண்மை எதுவெனில் இவ்வரவு செலவுத்திட்டமானது, போர்க்கால சூழலில் பிரஸ்தாபிக்கப்பட்ட ஓர் வரவு செலவுத் திட்டமாகும். இப்படியான ஒரு சூழலில் இதனை விட திறமையான ஒரு வரவு செலவுத் திட்டத்தை எதிர் பார்க்க முடியாது.

மூலம் யுத்த செலவீனத்தைக் கட்டுப்படுத்தி எமது மக்களுக்கு ஒரு சுபீட்சமான வரவு செலவுத் திட்டத்தினை இச் சபையில் பிரஸ்தாபிப்பதற்கு வழிகோல முடியும்.

### உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு சலுகை வழங்கல்

உள்ளூராட்சி சபைகளின் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு ஜனாதிபதி அவர்களால் முன்வைத்த யோசனைகளில் உள்ளூராட்சி கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு மேலதிகமாக ரூபா 100 மில்லியன் வழங்கி, அதன் மூலம் உள்ளூராட்சி சபைகள் கடன் பெற்று பயன் அடைய முடியுமென கூறியிருந்தார். இந்த நிதியத்தின் மூலம் கடந்த காலங்களில் பல உள்ளூராட்சி சபைகள் நன்மை அடைந்துள்ளன, என்பதை நான் அறிவேன். குறிப்பாக வடக்கு-கிழக்கில் உள்ள பல உள்ளூராட்சி சபைகள் இதனால் நன்மை அடைந்துள்ளன. ஆனால் வடகிழக்கில் நிலவும் யுத்தம் காரணமாக இச் சபைகள் இக்கடனை இன்று மீள செலுத்த முடியாதுள்ளன. கடன் பெற்று அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடங்கள் போரினால் நிர்மூலமாக்கப்பட்ட நிலையில் அவர்கள் அக்கடனை மீளச் செலுத்துவார்கள் என்று எவ்வாறு எதிர்பாக்க முடியும். எனவே இந் நிதியத்தில் இருந்து உள்ளூராட்சி சபைகள் கடன் பெறுவதற்கு மீண்டும் விண்ணப்பிக்கும் போது, பழைய கடன் பாக்கியைக் கட்டினால்தான் புதிய கடன்களை வழங்கலாம் என்ற நிபந்தனையில் இருந்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு விதிவிலக்கு வழங்க வேண்டுமென நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

### பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவு நிதி

1998 ஆம் ஆண்டு எமது தலைவர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மேன்மை தங்கிய ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ஜனாதிபதி அவர்கள் வடமாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினருக்கு தலா ரூபா 4 மில்லியன் என்ற அடிப்படையில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியினை ஒதுக்கீடு செய்திருந்தார். 1999 ஆம் வருடமும் நாம் அதே போன்ற ஒரு வேண்டுகோளினை விடுத்திருந்தோம்.

ஆனால்,ஜனாதிபதி அவர்கள் அத்தருணத்தில் திறைசேரியில் பண நிலை போதாமை காரணமாக எமது வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றது எனக்கூறி.இதற்கு ஈடாக 2000ம் வருடத்தில் வடகிழக்கைச் சேர்ந்த ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் தலா ரூபா5மில்லியன் என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதாக உறுதி அளித்திருந்தார். நான் சார்ந்திருக்கும் ஈ.பி.டி.பி. கட்சியின் சார்பிலும். அதன் செயலாளர் நாயகம் கௌரவ டக்ளஸ் தேவானந்தாவின் சார்பிலும் ஜனாதிபதிக்கு அவ்வாறாக கூடிய நிதியை வழங்கியதற்கு நான் இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

### யாழ். விவசாயிகளினது பிரச்சனைகள்

மேன்மைதங்கியஜனாதிபதி அவர்கள் சந்தை உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்துவதற்கு ரூபா225மில்லியனை வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார். இது வரவேற்கத்தக்க ஓர் நடவடிக்கையே, அதே வேளையில் யாழ்.விவசாயிகளின் வேண்டுகோளை நான் இச்சபையினதும் அரசாங்கத்தினதும் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். யாழ்ப்பாணத்திற்கும் நாட்டின் ஏனைய இடங்களுக்கும் இடையே ஓர் முறையான போக்குவரத்து வசதி இல்லை இதன் விளைவாக யாழ்.விவாசாயிகள் தமதுஉற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாதுதிணறுகின்றார்கள். இரு தடவைகள், யாழ்ப்பாண வெங்காய உற்பத்தியாளர்கள் தமது வெங்காய உற்பத்தியை கொழும்புக்கு அனுப்ப முற்பட்டு பெரும் நட்டத்தை சம்பாதித்ததை நான் அறிவேன். மிகச் சிரமத்தின் மத்தியில் அவர்கள் தனியார் கப்பல் ஒன்றின் மூலம் தங்களது ஒரு போகஉற்பத்தியை கொழும்புக்கு அனுப்பியிருந்தனர். கப்பல் போக்குவரத்தில் சம்பந்தமுடைய அதிகாரிகளினுடைய மந்தப்போக்கு காரணமாக கப்பல் பல நாட்கள் தாமதித்தே கொழும்பை வந்தடைந்தன. இதன் விளைவாக பாதிக்கு மேற்பட்ட வெங்காயம் அழுகிய நிலையிலேயே கொழும்பை வந்தடைந்தது. இன்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் இவ் விவசாயிகளுக்கு கைகொடுக்க முன் வந்துள்ளார். அவர் தங்களினால் யாழ்ப்பாணத்துக்கு பொருட்களை அனுப்பும் கப்பல் மீண்டும் கொழும்புக்கு வரும்போது விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை கட்டணம் இல்லாமலே அனுப்புவதற்கு வழிவகை செய்துள்ளார். இருந்தும். இக்கப்பல் சேவையானது மாதத்தில் ஓர் இரு முறையே சேவையை நடாத்துவதால் விவசாயிகள் இதனால் முழுப்பலனை அடைய முடியாது இருக்கின்றார்கள்.

அரசாங்கம் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தொடர்ச்சியாக சீமெந்தை அனுப்புவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இக்கப்பல் யாழ்ப்பாணத்தில் இருந்துதிருமலையை நோக்கி வரும் பொழுது யாழ். விவசாயிகளுடைய உற்பத்திப் பொருட்களை எடுத்துவரலாம் நாம் ஏற்கனவே அரசாங்கத்திடம் இது தொடர்பாக வேண்டுகோள் விடுத்துள்ளோம். இக்கப்பல் விவசாய உற்பத்திபொருட்களையும் மற்றும் பண்ணை உற்பத்தி பொருட்களையும் எடுத்துச்செல்வதற்கு அனுமதி வழங்கும்படி கேட்டிருந்தோம். ஆனால், பாதுகாப்பு காரணங்களைக்காட்டி பாதுகாப்பு அமைச்சு, குறிப்பாக கடற்படை அதிகாரிகள் இதற்கு அனுமதி வழங்க மறுத்துள்ளனர். சீமெந்து கொண்டுசெல்வதற்கு இக்கப்பலுக்கு அனுமதி வழங்க முடியுமெனில் அதேகப்பலில் விவசாய உற்பத்திப்பொருட்களையும் பண்ணை உற்பத்திபொருட்களையும் எடுத்துச் செல்வதில் பாதுகாப்பு கெடுபிடி என்ன இருக்கின்றது என்று எனக்கு விளங்கவில்லை.

### BIO Tec International (Pvt) Ltd

மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் தமது பிரேரணையில் ஆராய்சியாளர்களுக்கும். கண்டுபிடிப்பாளர்களுக்கும் விசேட ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வெகுமதி வழங்குவதற்கு முன் மொழிந்துள்ளார். இதுவும் ஓர் வரவேற்கத்தக்க நடவடிக்கையே. இச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றின் வேண்டுகோளை நான் இங்கு பிரஸ்தாபிக்க விரும்புகின்றேன் இந் நிறுவனத்தின் பெயர் BioTec International(pvt)Ltd இந்நிறுவனமானது யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்களையும் கல்விமான்களையும் உள்ளடக்கிய ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு விஞ்ஞான முறையில் குறிப்பாக Bio Technological processஎன்ற தொழிநுட்பத்தின் மூலம் இவற்றிற்கு பெறுமதிச் சேர்க்கை செய்வது உதாரணத்துக்கு அவர்கள் இத்தொழில் நுட்பத்தின் மூலம் கோதுமை, சோளம்,அரிசி மரவள்ளியிலுள்ள மாப் பொருளை குளுக்கோசாக மாற்றி இருக்கின்றார்கள். இந் நிறுவனம் தனது 3ம் வருட ஆராய்ச்சி நடவடிக்கைகளில் வெற்றிகரமாக ஈடுபட்டிருந்த வேளையில், ''றிவிரச,, இராணுவநடவடிக்கையின் போது அவர்களது நிலையானசொத்துக்கள் யாவும் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. அந் நிறுவனம் மீண்டும் தனது ஆராய்ச்சிநடவடிக்கைகளைத் தொடர முடியாத நிலையில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது இந்நிறுவனத்துக்கு ஏற்பட்ட நட்டத்தொகை ஏறத்தாழ 1.5 மில்லியன் என கணக்காய்வாளர்கள் மதிக்கப்பட்டுள்ளனர். இந்நிறுவனத்தின் இப்பரிதாப நிலையினைக் கருத்திற்கொண்டு மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் முன் மொழியப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பாளர்கள் நிதியத்தில் இருந்து அவர்களின்நட்ட இழப்பை ஈடுசெய்து அந்நிறுவனம் மீண்டும் இயங்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### முதலீட்டுச்சபை வீடமைப்பு செயற்திட்டங்கள்

அடுத்ததாக முதலீட்டு சபைகளினால் ஊக்குவிக்கப்படஇருக்கும் 25 வீட்டுத்திட்டம்பற்றி குறிப்பிட விரும்புகின்றேன். யுத்தத்தினால் யாழ்ப்பாணத்தில் 50. 000 மேற்பட்ட வீடுகள் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன, அதே தொகையளவிலான வீடுகள் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. இவ்வாறான சூழலில் அரசாங்கம் முன் வைத்திருக்கும் இவ் வீட்டுத் திட்டங்களில் ஒன்றை யாழ்ப்பாணத்திலும் அமுல்படுத்த வேண்டும் என்றும் நான் வலியுறுத்திக்கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

### இளைஞர் அபிவிருத்தி பணிக்குழு

மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் வேலை அற்று இருக்கும் இளைஞர்களுக்கு ரூபா 3, 500 மாதப்படியாக வழங்கி அரசின் முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முனைந்திருக்கும் அரசாங்கத்தின் முன்னோடி செயற்திட்டமானது காலத்திற்கேற்ற ஒரு தகுந்த நடவடிக்கையாகும். இம் முன்னேற்ற செயற்திட்டத்தில் அரசாங்கம் தனது குறிக்கோளில் வெற்றிகண்டு வடக்கிற்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படவேண்டும் என நான் விரும்புகிறேன். அப்படி விஸ்தரிக்கப்பட்டால் தான் யுத்த கொடூரத்தில் அகப்பட்டிருக்கும் அப்பாவி இளைஞர்களுக்கு ஆறுதல் அளிப்பதாக அது அமையும்.

### ஆயுள்மற்றும் சுகாதாரகாப்புறுதி

வரவு செலவுத்திட்ட பிரேரணையில் ஆயுள் மற்றும் மருத்துவ காப்புறுதிக்கு செலுத்தப்படும் பணத்திற்கு வரி விலக்கு அளிப்பதென்ற பிரேரணை மக்களிடையே சேமிப்பை ஊக்குவிப்பதை மையமாகக் கொண்டே பிரேரிக்கப் பட்டுள்ளது. ஆனால்ஆயுட்காப்புறுதித்திட்டங்களில் அவை அரச கூட்டுத்தாபனங்களால் அறிமுகப்படுத்தப்பட்டவையாக இருந்தாலும் சரி, அல்லது தனியார் நிறுவனங்களினால் அறிமுகப்படுத்தப்படுபவையாக இருந்தாலும் சரி, அவற்றில் மக்கள் நம்பிக்கை இழக்கும் அம்சம் ஒன்றுள்ளது. அதையிட்டு நான் குறிப்பிட விரும்புகின்றேன். ஓர் ஆயுட் காப்புறுதி திட்டத்தில் உண்மையான நன்மை பயக்கும் விடயம் எதுவெனில். காப்புறுதியாளர் இறக்கும் பட்சத்தில் காப்புறுதி செய்யப்பட்ட தொகையின் இரட்டிப்பு அல்லது மும்மடங்கான தொகை அவரது குடும்பத்தினருக்கு வழங்கப்படுவது

இதுவே ஆயுட் காப்புறுதியில் உண்மையான நன்மை பயக்கும் அம்சமாகும். ஒருவர் ஆயுட்காப்புறுதிக்கு செலுத்தும் பணத்தை சேமிப்புக்கணக்கில்இடுவாராகில், ஆயுட்காப்புறுதி கால முடிவில் அவருக்கு கிடைக்கும் பணத்தை விட சேமிப்பில் இருந்து கிடைக்கும் பணம் மிகையானது. ஆனால் நான் குறிப்பிட்ட இந்த இரட்டிப்பு அல்லது மும்மடங்கான தொகை காப்புறுதியாளர் பயங்கரவாத நடவடிக்கைகளினால் இறந்திருந்தால் கொடுக்கப்படுவது இல்லை. இதை நான் காப்புறுதியுடன் தொடர்புடைய சொற்பிரயோகத்தில் கூறுவதாயின். ஆயுட்காப்புறுதிக்கு பயங்கரவாதக் காப்பீடு செய்யப்படுவதில்லை.

இன்று பயங்கரவாத நடவடிக்கையென்பது வாழ்க்கையின் நாளாந்த ஒரு அம்சமாக காணப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு இடத்தில் குண்டுவெடிப்பு அல்லது பயங்கரவாத நடவடிக்கை நடந்து கொண்டு இருக்கின்றது. அரசாங்கம் தனது உண்மையான குறிக்கோளாகிய காப்புறுதியின் மூலம் சேமிப்பை மக்களிடையே நடைமுறைக்குக் கொண்டு வருவதை அடைய வேண்டுமாயின் காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களையும் மற்றும் காப்புறுதியில் ஈடுபடும் தனியார் நிறுவனங்களையும் ஆயுட்காப்புறுதிக்கு பயங்கரவாத காப்பீடு வழங்கும் வண்ணம் வற்புறுத்தல் வேண்டும். காப்புறுதி நிறுவனங்கள் தங்களது ஆதாயத்தை மட்டும் சிந்திக்கக்கூடாது இன்றைய சூழலுக்கு ஏற்ப மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விதத்தில் காப்புறுதியை வழங்குவதில் அவர்களும் அக்கறை கொள்ளல்வேண்டும.

### அரச பணியாளர்களின் சம்பளம்

அடுத்ததாக மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் குறிப்பிட்டிருந்த 1995-ம் ஆண்டிலிருந்து அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட அரச துறை ஊழியர்களுக்கான சம்பள நடவடிக்கைபற்றி குறிப்பிடவிரும்புகின்றேன். அரசதுறை ஊழியர்களுக்கு ஓர் சீருள்ள சம்பளத்தை வழங்கும் பொருட்டு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை அறிவிக்கும் அதே வேளை, மிக கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் அரச கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த சில ஊழியர்களைப் பற்றி நான் குறிப்பிடவிரும்புகிறேன்.

### காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களது பிரச்சினை

முதலாவதாக காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலை ஊழியர்களது பிரச்சினை பற்றி பிரஸ்தாபிக்க விரும்புகிறேன். இத்தொழிற்சாலையின் சீமெந்து அரைக்கும் பகுதியைமட்டும் மீண்டும் ஆரம்பிக்கச் செய்து அதன் மூலம் அத் தொழிற்சாலையைச்சேர்ந்தசுமார்350 ஊழியர்கள் மீண்டும் தமது முழுமையான சம்பளத்துடன் தொழில்புரிய வைக்க வேண்டும் என்று நாம் அரசாங்கத்தை வற்புறுத்தி வந்துள்ளோம். இதனை மீளியங்கச் செய்வதற்கு இன்று பாதுகாப்பு ஒரு காரணமாகக் கூறப்பட்டு அம்முயற்சிகள் முடங்கப்பட்ட நிலையில் உள்ளன. ஓர் பாதுகாப்பு இடைவழி ஒன்றினை ஏற்படுத்தி அதன் மூலம் தொழிலாளர்கள் வேலைக்கு சென்றுவருவதற்கு வழிவசதிகளைச் செய்து அச் சீமெந்துத் தொழிற்சாலையின் அரைக்கும் பகுதியினை இயங்கவைப்பதற்கான நடவடிக்கை ஏற்படுத்த வேண்டுமென கேட்டுக்கொள்ளவிரும்புகின்றேன்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் — செயின்

- குறள்

# வலம்புரி

## எய்தவனிருக்க

கட்சியரசியல் முரண்பாடுகளே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாமலும், இனப் பிரச்சனைக்கு காத்திரமான முடிவுகளைக் கொண்டு வரமுடியாமலும் தடைக்கல்லாக இருக்கின்றன. இந்த நிலையில் தான் சர்வதேச அனுசரணைகளும், கவனமும் தேவைப்படுகின்றன.

இனவாதக் கொடூரங்கள் இருபத்தோராம் நூற்றாண்டிலும் தொடருமாயின் பகை மூட்டத்தில் பசுமையான தீவு அழிந்து சுடுகாடாகி- வனாந்தரமாகும் சூழ் நிலையே உருவாகும். யுத்தமுனைப்புக்களுக்கு பெரும் பொருள் செலவிடப்படின் வங்குறோத்து நிலையை நாடு அடைந்து அழியும். இதன் தாற்பரியத்தை ஒட்டுமொத்தமாக சகல பெரும் பான்மைக் கட்சிகளும் உணர வேண்டும்.

கடன் பட்டு தொழில் வளம் பெருக்கினால் வரவேற்கலாம். காரணம் மக்கள் நலன் அதில் பிரதிபலிக்கும். கடன் பட்டு காசைக் கரியாக்கினால் அங்கொடை மட்டுமன்றி இலங்கைத் தீவு பூராக மன நோய் வைத்தியசாலைகள் தோன்ற வேண்டும். கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்தல் நாட்டுக்கு நன்மை பயக்காது. ஒவ்வொரு அதிகாரக் கதிரைகளும் இறங்கும் தறுவாயில், இறக்கும் தறுவாயில் தான் ஞானம் பிறந்து உண்மையை உதிர்க்கத் தலைப்படுகின்றன.

எல்லா இனங்களையும் சம நிலையில் பார்க்கும் அரசியல் பக்குவம் ஒன்று உருவாகும் போது தான் தேசிய இனப் பிரச்சினையும், சமாதானமான அரசியல் தீர்வும் வெளிப்படும். தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுத்த படி சிங்கள அரசாங்கங்கள் உரிமைக் குரல்களைப் பயங்கரவாதமாகத் திசை திருப்பியது கூட வரலாறு ஆகிவிட்டது.

இன்றுவடக்குகிழக்குபிரதேசம் மட்டுமன்றி முழு இலங்கையுமே அபிவிருத்தி குன்றி யுத்தம் வன்முறைகள், ஜனநாயக விரோதச் செயல்கள் ஆகியவற்றுள் சிக்கியுள்ளது.

உண்மையை ஏற்க மறுத்து- உரிமைகளைக் கொடுக்க மறுத்து செயற்பட்டவர்களே. எய்தவன் இருக்க இனியும் அம்பை நோகலாமா? வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்; சமாதானம் மலர வகை செய்வோம்.

- அன்புடன் ஆசிரியர்

# சேதமடைந்த நிலையில் மாவிலிபாலம்

# பாவனையாளர் மத்தியில் அதிருப்தி

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் கடந்த வருடம் யூ. என். எச். சீ. ஆர். இனால் 6 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட மாவிலித் துறை பாலம் சேதமடைந்து மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுவதாகப் புகார் தெரிவிக்கப் படுகின்றது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப் படுவதாவது; நெடுந்தீவுக்கு பொருட்களை ஏற்றி வந்த வத்தை உருக்குலைந்ததால், அவ்வத்தை கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. படகுகள் அணைப்பதற்கு பொருத்தமில்லாத ஓர் இடத்தில் இவ் வத்தைக்குள் கொங்கிறீற் போட்டு பாலம் அமைக்கப்பட்டது.

ஒப்பந்தக் காரரால் சரியான முறையில் திட்டமிட்டு கொங்கிறீற் போடப்படாததனால் வத்தை சிதைவடைய கீழ் கல்லுகடலுடன் அள்ளுப்பட்டுச்செல்கின்றது. இதனால் பாலத்தின் வடக்குப் பகுதியும் தெற்குப் பகுதியும் முற்றாகச் சேதமாக்கப்பட்டு, கிழக்குப் பகுதி மாத்திரம் நிலத்துடன் தொடர்பு பட்டிருப்பதனால் எஞ்சியுள்ளது.

இதேவேளை ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கும் பாலம் மிகவும் காத்திரமான நிலையிலேயே இன்றும் உள்ளது. படகுகள் அனைத்தும் இப்பாலத்திலேயே அணைக்கப்பட்டுவருகின்றது.

அத்துடன் 1996-ம் ஆண்டு ஈ.பி.டி.பி.யினரால்பனம்குத்திகளினால் அமைக்கப்பட்டு பயபடுத்தப்பட்டதற்காலிகன் பாலம் இருந்த இடத்திலாவது, இப்புதிய பாலத்தினை அமைத்திருக்கலாம் என அப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப் படுகிறது.

அதேவேளை நெடுந்தீவுப் பகுதி அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் நிதிகள் மக்கள் பங்களிப்புடன் திட்டமிட்டு செயற்படுத்தப்படாமல் விஷமிகள் சிலரால் பொருத்தமற்ற செயற்பாடுகளுக்கு பயன் படுத்தப்படுவதாக மக்கள் மத்தியில் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (க-82)

## மலையகப் பகுதிகளில் தமிழ்ப் பொலிஸாரின் இடமாற்றம் இடைநிறுத்தம்

(மட்டக்களப்பு)

மலையகப்பகுதிப் பொலிஸ் நிலையங்களில் கடமை புரியும் தமிழ் பொலிஸாரின் இடமாற்றங்கள் இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமை புரியுமாறு மேற்படி தமிழ் பொலிஸாருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தது. கால்நடை அபிவிருத்தி பெருந்தோட்ட கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருடன் நடத்திய பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து மலையகப் பகுதி தமிழ்ப் பொலிஸாரின் வடகிழக்கு மாகாணத்திற்கான இடமாற்றம் இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-60)

## திருத்தப்படாத வீதி

துன்னாலை கிறிஸ்தவ ஆலயத்தில் இருந்து சோழிய வத்தை ஊடாக, புலோலி அமெரிக்கமிஷன் பாடசாலை வரையானவீதி, திருத்துவதற்காக இருமருங்கிலும் கற்கள் பறிக்கப்பட்ட நிலையில் நீண்டகாலமாக காணப்படுகிறது.

இருபக்கங்களிலும் கற்கள் காணப்படுவதனால் அவ்வீதியால் வரும் வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்திச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், இரவு நேரங்களில் அப்பாதையூடாக பயணம் செய்பவர்கள் கற்குவியல்களில் தடக்குற்று வீழ்கின்ற சம்பவங்களும் அதிகரித்து வருகிறது எனவும் அப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (க-23)

## 9 இலட்சம் ரூபா செலவில் நூலகங்கள் புனரமைப்பு

(அச்சுவேலி)

வலி. கிழக்கு பிரதேச சபையினால் இப்பகுதியின் சனசமூக நிலைய அபிவிருத்திக்கென கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட 09 இலட்சம் ரூபா நிதியிலிருந்து நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் மற்றும் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்ற திட்டங்கள் பின்வருமாறு:

அச்சுவேலி புனித திரேசாள் பாடசாலை 20, 000 செலவிலும், சிறுப்பிட்டி, புத்தூர் ஜெனசக்தி சனசமூக நிலையம் புனரமைப்பு 25, 000 ரூபா செலவிலும், கோப்பாய் சரஸ்வதி பாலர் பாடசாலை தொடர் வேலை 25, 000 ரூபா செலவிலும் நிறைவு செய்யப்பட்டது.

இவைதவிர கோப்பாய் முழுமதி சனசமூக நிலையம் புனரமைப்பு 25, 000 ரூபா செலவிலும், அச்சுவேலி ஞான வைரவர் சனசமூக நிலையம் புனரமைப்பு 30,000 செலவிலும், யோகபுரம்அண்ணா சனசமூக நிலைய புனரமைப்பு 25,000 செலவிலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இவற்றுடன் வளலாய் கலைக்கதிர் சனசமூக நிலைய புனரமைப்பு 75,000 ரூபா செலவிலும், அச்சுவேலி கதிரொளி சனசமூக நிலைய புனரமைப்பு 40. 000 ரூபா செலவிலும், கதிரிப்பாய் முரசொலி சனசமூக நிலையம் 40, 000 ரூபா செலவிலும், நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையம் 30, 000 ரூபா செலவிலும் நிறைவு செய்யப்பட்டது.

இருபாலை சிறுவர் பூங்கா அமைத்தல், அச்சுவேலி பொது விளையாட்டு மைதானம் அமைத்தல், புத்தூர் வளர்மதி சனசமூக நிலையக் கட்டடம் புதிதக அமைத்தல், நீர்வேலி சிவசக்தி சனசமூக நிலையம் புனரமைப்பு போன்ற செயற் திட்டங்கள் துரிதகதியில் நடைபெற்றுக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க-57)

## உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை....

### லங்கா சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களது பிரச்சினை

அடுத்ததாக லங்கா சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்கள் பற்றி குறிப்பிட விரும்புகின்றேன். இத்தொழிற்சாலையைச் சேர்ந்த சுமார் 450 தொழிலாளர்களே இன்றுள்ளனர். இவர்களுக்கு 1989-ம் ஆண்டு சம்பள கணிப்பீட்டு அடிப்படையில் அரைச்சம்பளமே வழங்கப்படுகின்றது. அவர்கள் செய்யாத தவறுகளுக்காக இத்தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் முழுமையான சம்பளத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன்,

### பரந்தன் இரசாயன தொழிற்சாலை ஊழியர்களினது வேண்டுகோள்

அடுத்ததாக பரந்தன் இரசாயன தொழிற்சாலை ஊழியர்கள் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இவ் ஊழியர்களும் தாங்கள் செய்யாத தவறுக்காக தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள். இதனைசேர்ந்த சுமார் 179 ஊழியர்களுக்கு 1999-ம் வருடம் மே மாதத்தில் இருந்து இன்னும் சம்பளம் வழங்கப்படவில்லை தொழிற்சாலை மூடப்பட்ட நிலையில் அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதில் அரசுக்கு கஷ்டமாகவிருப்பின், அவ்வூழியர்கள் தமக்கும் ஏனைய கூட்டுத்தாபனத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட நஷ்டஈட்டுடன்கூடய ஒரு இளைப்பாற்றுத் திட்டத்தினை அமுல்படுத்தும் வண்ணம் வேண்டுகோள்விடுத்துள்ளார்கள். அவர்களின் வேண்டுகோளினை கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கும் வண்ணம் நான் கேட்டுக் கொள்ளவிரும்புகின்றேன்.

### உப்புக் கூட்டுத்தாபன யாழ். உப்பளத்தைச் சேர்ந்த ஊழியர்களது வேண்டுகோள்

ஊழியர்கள் பிரச்சினை தொடர்பாக கடைசியாக இன்னும் ஒன்றை கூறவிரும்புகின்றேன். உப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த யாழ். உப்பளத்தைச் சேர்ந்த ஊழியர்களின் பிரச்சினையாகும், அது இவ் உப்பகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் 1996-ம் வருடம் டிசம்பர் மாதத்திலிருந்து மந்திரி சபை தீர்மானத்துக்கமைய வேலையிலிருந்து நீக்கப்பட்டு அவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் இதுவரைஅவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே அவர்களுக்கு உடனடியாக நஷ்டஈடு வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு பொருளாதார சிக்கல் இருக்குமானால், அதுவரை அவர்களுக்கு சம்பளத்தை வழங்கும் வண்ணம் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

நான் எனது உரையை முடித்துக்கொள்ள முன்பு, நான் எனது உரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக. மீண்டு ஒரு முறை குறிப்பிட விரும்புகிறேன். அரசியல் தீர்வின் போது சகல தரப்பினராலும் சகல விடயங்களிலும் ஒருமித்த கருத்து இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது, சில விடயங்கள் சகலருக்கும் ஏற்புடையதாக இருக்கும். சில விடயங்களில் விட்டுக்கொடுப்புக்களின் மூலம் சமரசத்துக்கு வரக் கூடியதாக இருக்கும். சில விடயங்களில் உடனடியாக உடன்பாடு இல்லாது இருக்கலாம். இதற்காக சகல தரப்பினரும் சகல விடயங்களையும் ஏற்றுக்கொண்ட பின்புதான் அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்தலாம் என நாம் சிந்திப்போம். ஆனால் என்றுமே நாம் பிரச்சனைக்கு தீர்வைக் காண முடியாது.

இதனால் தான் எமது கட்சியானஈ. பி. டி. பிஇத்தீர்வினை இரண்டு கட்டங்களில் அணுகும்படி வற்புறுத்துகின்றது. முதற்கட்டமாக சகல தரப்பினராலும் இணக்கப்பாடு ஏற்பட்ட விடயங்களை அரசியல் அமைப்பு சீர்திருத்த பிரேரணையாகக் கொண்டு வந்து அதனை உடனடியாக வடைமுறைப்படுத்தல். இரண்டாம் கட்டமா இணக்கம் காணப்படாத விடயங்களை இதில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் பேசி தீர்வுகாணல். அப்படியான ஒரு சூழலில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி மூன்றாம் தரப்பு அனுசரணையுடன் அல்லது தேவையேற்படின் மத்தியஸ்த்துடன் தீர்வு நடவடிக்கைகளில் ஈடுபடலாம்

கடைசியாக ஒன்றைக் கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். கடந்த கிழமை இச்சபையில் கௌரவ ஜோன் அமரதுங்கஅவர்கள் ஈ.பி.டி.பி. பற்றி குறிப்பிடும்போது ஈ.பி.டி. பி. ஓர் 'ஆயுத கும்பல்' என்று குறிப்பிட்டிருந்தார். அப்போது நான் சபையில் இருந்தேன் ஆனால் அவரது பேச்சை குறுக்கீடு செய்ய விரும்பவில்லை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்ஈ.பி.டி.பி ஒரு 'ஆயுத கும்பல்' அல்ல அது ஓர் அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அதன் அங்கத்தவர்கள் ஆயுதம் தாங்கியிருப்பது அவரது நண்பர்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கே. அவர்களினது ஆட்சிக்காலத்தின் போது இதே நோக்குக்காகவே ஈ.பி.டி.பியினா ஆயுதம் தாங்கியிருந்தனர்.

எனக்கு இச்சந்தர்ப்பத்தை வழங்கியதற்கு நன்றியைக் கூறி விடைபெறுகின்றேன்.

★

## கடலரிப்பால் வீதி சேதம்

(நெடுந்தீவு)

கடலரிப்பின் காரணமாக முற்றாக சேதமடைந்த நிலையில் நெடுந்தீவு கடற்கரை வீதி காணப்படுகிறது.

கிட்டத்தட்ட 4வருடகாலமாக இந்தநிலையில் இவ்வீதி காணப்படுவதாகவும், சம்பந்தப்பட்டவர்கள் எவரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(க-82)

## உ.கிழங்கு அமோக விளைச்சல்

(இணுவில்)

புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் பகுதிகளில் இம்முறை உருளைக்கிழங்கு செய்கையில் அமோக விளைச்சல் கிடைத்துள்ளது.

இருப்பினும் இவற்றினை சந்தைப்படுத்தும் போதிய வசதிகள் இன்மையால் விவசாயிகள் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

(க-48)

## சுட்டுக் கொலை

கைதடிப் பகுதியில் நடந்த இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் முன்னாள் சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினரான கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் என்றும் தெரிவிக்கப்படுகின்றது, (வ-4)

### தமிழ்...

ஒரு மணித்தியாலயம் வரை நடைபெற்றது.

இச் சந்திப்பின் போது நோர்வே வெளிவிவகார அமைச்சர் இனப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுடனும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் நடாத்திய பேச்சுவத்தையின் விபரங்களை அன்ரன் பாலசிங்கத்திடம் எடுத்துக் கூறினார்.

இச்சந்திப்பின்போது இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதாக இருந்தால் அதற்கு முன்னோடியாக அரசு முனைப்புடன் முன்னெடுத்துச் செல்லும் இராணுவ தீர்விற்கான யுத்த நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்.

தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமிப்பைக் கைவிட்டு அவ்விடங்களிலிருந்து வெளியேற வேண்டும்.

பேச்சுவார்த்தை மூலம் சமாதான தீர்வுகாண வேண்டும் என்று கூறிக் கொள்ளும் இந்த அரசாங்கம் மறுபுறத்தில் இராணுவத் தீர்வை நோக்கி செல்வதற்கு வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தொகையானநிதியை ஒதுக்கி அதன் மூலம் யுத்த தளபாடங்களை கொள்வனவு செய்து வருகின்றது. இது அரசின் இரட்டை வேடத்தையே எடுத்துக் காட்டுகின்றது.

இந்நிலையில் சந்திரிகா அரசு இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவிரும்பின் உடனடியாக மோதல்களைத் தவிர்த்து யுத்தநிறுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். என அன்ரன்பாலசிங்கம் நோர்வே வெளிவிவகார அமைச்சரிடம் எடுத்துக் கூறினார்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகளுடன் இதுவரை நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியையே கண்டுள்ளது என்று நோர்வே வெளியுறவு அமைச்சரைச் சந்தித்த பின் அன்ரன் பாலசிங்கம் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

★ திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியில்

# இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு புனிதத்தன்மை பேணப்பட வேண்டும்

## மாவை எம்.பி.க்கு பரிபாலனசபைத் தலைவர் கடிதம்

(மன்னார்)

திருக்கேதீஸ்வர ஆலயமும் அதன் சுற்றாடல் பகுதியும் முற்றுமுழுதாக இராணுவ மயமாகவே காட்சியளிக்கிறது. ஆலயத்தின் தீர்த்தத் தடாகம் இராணுவத்தினர் குளிப்பதற்கும் இராணுவ சீருடைகள் தோய்ப்பதற்கும் பாவிக்கப்படுகிறது. வசந்த மண்டபம் இராணுவ பயிற்சித் தளமாக காணப்படுகிறது.

இவ்வாறு திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலனசபைத் தலைவர் ஆர். நமசிவாயகம் தமிழர் விடுதலைக் கூட்டணி தேசியபட்டியல் எம். பி. மாவை சேனாதிராஜாவுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

பரிபாலனசபைத் தலைவர் கடந்த 21ம் திகதி திங்கட்கிழமை சிவராத்திரிதினத்தை முன்னிட்டு ஆலயத்தைப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிபெற்று பார்வையிட்ட பின்பே இதனை மாவை சேனாதிராஜாவுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது மடு தேவாலயப் பகுதியிலிருந்து ஆயர்களின் வேண்டுகோளிற்கு இணங்க இராணுவம் எவ்வாறு வாபஸ் பெறப்பட்டதோ அவ்வாறே தாங்களும் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் புனிதத் தன்மையை பாதுகாப்பதற்கு ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு இராணுவத்தை வெளியேறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆலயத்தின் உட்பிரகாரமும் சுற்றுப்புறப் பகுதிகளும் முற்றுமுழுதாகசேதமடைந்த நிலையிலேயே காட்சி அளிக்கிறது. மேற்கு வீதிப்பகுதி இராணுவத்திற்கு பயிற்சி அளிப்பதற்கு பாவிக்கப்படுகிறது. ஆலயத்தின் தேர் சேதமடைந்து காணப்படுகிறது.

ஆலயப் பகுதியில் இருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு அடியார்களின் வழிபாட்டுக்கு இடையூறு இல்லாவண்ணம் இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும். ஆலயத்தில் பூசைகள் நடாத்துவதற்கு ஆலயப் புனரமைப்பிற்கும் ஒழுங்குகள் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்குமாறும் அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## யாழ். மத்தியில் பேடன் நினைவு

(யாழ்ப்பாணம்)

சாரணர் இயக்கத்தின் தந்தை பேடன் பவல் பிரபுவின் பிறந்ததின நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறும்.

கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் துருப்புத் தலைவர் ரீ. திவ்யராஜன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக டாக்டர் ஆ. திருநாவுக்கரசு கலந்துகொள்வார்.

இந் நிகழ்விற்கான ஒழுங்குகளை கல்லூரியின் சாரணர் பொறுப்பாசிரியர் கே. கணபதி அவர்கள் ஒழுங்குபடுத்தியுள்ளார். (ந-34)

### மட்டக்களப்பு..

கட்சிகள் பேச்சில் இணைய வேண்டும். மட்டக்களப்பில் பாஸ் நடைமுறையைக் கொண்டுவரக்கூடாது போன்ற ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தே இவ்வூர்வலம் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புகையிரத...

நிலைய அதிபர்கள் கட்டுப்பாட்டாளர்கள் ஹாட் ஆகியோர் இதில் கலந்துகொள்ள உள்ளனர்.

இவ்வேலைநிறுத்தத்தினால் புகையிரத சேவை முற்றாக ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்படுவதை தவிர்ப்பதற்கு புகையிரத அதிபர்கள் சங்கத்துடன் போக்குவரத்துஅமைச்சர் பௌஸி இன்று காலை சங்க உறுப்பினர்களுடன் வேலை நிறுத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

### இனப்பிரச்சினை...

லிம் மக்களின் தாயகக் கோட்பாடான வடக்குக் கிழக்கு இணைந்த பிராந்தியங்களின் ஒன்றியமாக இலங்கையை அறிவிக்க வேண்டும் என்று கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

இனப்பிரச்சினைத் தீர்வில் அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதன் மூலம் காணப்படும் தீர்வே உறுதியானதும் உயர்ந்ததும் என நாம் கருதுகிறோம்.

வன்னி, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் பாஸ் நடைமுறை குறித்து ஜனாதிபதியுடன் பேசுவதற்கு முடிவு செய்துள்ளோம் (வ-7)

### இளம் பெண்...

என்ற 31 வயதுடைய பெண்ணே கைதானவரென மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது வீடும் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரசபை குண்டு வெடிப்புத் தொடர்பாக இவர் சந்தேகத்தில் கைதானதாகக் கூறப்படுகிறது. (க-103)

### புலிகள் --

மட்டக்களப்பு.

★ உருத்திரன் (யோகராசா - இராசகுமார்) மட்டக்களப்பு.

★ சசிகரன் (சிதம்பரப்பிள்ளை - விஜயரட்ணம்) மட்டக்களப்பு

★ தணிகைவேல் (சச்சிதானந்தன் - சதானந்தன்) அம்பாறை. ஆகியோரே உயிரிழந்ததாக அறிவித்துள்ளனர். ந-6-4

## கோப்பாய்ப் பகுதி சுற்றிவளைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதி இராணுவத்தால் நேற்றுக்காலை சுற்றிவளைக்கப்பட்டு வீடு வீடாகச் சென்று சோதனை நடத்தப்பட்டது.

பருத்தித்துறை வீதியில் இருபாலை வரைக்கும் இச்சுற்றிவளைப்பு இடம்பெற்றது ராஜவீதி கோப்பாய் பகுதிமக்கள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டு அடையாள அட்டைகள் சோதிக்கப்பட்டன்பினர் விடுவிற்கப்பட்டனர். (வ-57)

## 18வது சதம் பூர்த்தி

(இஸ்லாமாபாத்)

இலங்கை கிரிக்கட் அணியின் முதுநிலை வீரர்களுள் ஒருவரான அரவிந்த டி சில்வா தனது 18ஆவது கிரிக்கட் டெஸ்ட் சதத்தை நேற்றுப் பூர்த்தி செய்துள்ளார்.

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையே பாகிஸ்தானில் நடைபெறும் கிரிக்கட் டெஸ்ட் போட்டியின் போதே அவர் இச் சதத்தைப் பூர்த்திசெய்தார். (7)

# ஐ. தே. க. தலைவர் ரணிலுக்கு எதிராக மேலும் 16 எம்.பிக்கள் போர்க் கொடி!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கா இருப்பதற்கு எதிராக மேலும் பல ஐக்கியதேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரணில்விக்கிரமசிங்காவுக்கு எதிரான போக்குடைய 16ஐ. தே. கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சமீபத்தில் கோட்டைப் பகுதியில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் கூடிப் பேச்சு நடத்தியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகர்கள் அடங்கிய குழுவினர் ரணில் விக்கிரமசிங்காவை கட்சித்தலைமையிலிருந்து நீக்குவதற்கு இணைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பாராளுமன்ற உறுப்பினர் குழுவில் முன்னாள் கட்சி செயலாளர் சிறிசேன கூரேயை கட்சியில் இணைக்க முயலும் பாராளுமன்ற உறுப்பினர் லக்மன் சேனாநாயக்காவும் இணைந்திருக்கிறார் என்றும் இதே வேளை ஐ. தே. கட்சியில் அதிருப்தி தெரிவித்துள்ள மேற்படி குழுவுடன் ஐ. தே. கட்சியின் மாற்று அணியினர் இணைந்து கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (4)

### வன்னி ..

புடன் வன்னிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு ஐந்து தினங்களுக்கு அவர்களது உறவினர்களுடன் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

மீண்டும் இவர்களை இன்று தென்னிலங்கைக்கு அழைத்துச் செல்வதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

இதனிடையே கடந்த வெள்ளிக்கிழமை முதல் உண்ணாவிரதிகள்தமது போராட்டத்தைத் தற்காலிகமாக கைவிட்டுள்ளதை அடுத்து அவர்களது உடல் நிலை குணமடைந்து வருவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் ஹர்சாகுணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க உண்ணாவிரதிகளின் உறவினர்களுடன் உரையாடுவதன் மூலம் விடுதலைப் புலிகளிடம் இருக்கும் யுத்தக் கைதிகளின் எதிர் காலம் குறித்து முடிவெடுக்கப்படும் என்று காணாமல் போன படையினரின் உறவினர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளைவன்னியில்புலிகளின் பாதுகாப்பில் யுத்தக் கைதிகளாக இருக்கும்மேலும் 12பேரின் உறவினர்கள் பெற்றோர்கள் யுத்தக் கைதிகளை பார்வையிட விரும்பினால் அவர்களையும் கூட்டிச்செல்ல தயாராக இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் ஹர்சா குணவர்த்தனா தெரிவித்துள்ளார். (வ-7)

## இந்தியா அறிவுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் காணப்படும் அரசியல் தீர்வானது அனைத்துத் தரப்பு மக்களினதும் அபிலாசைகளையும் திருப்திப்படுத்தும் வகையிலும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் அமைவதாகவும் இருக்கவேண்டும் என இந்தியா அறிவுறுத்தியுள்ளது.

### யாழ்- மேயர் - - -

மாவை. சேனாதிராஜா எம். பி. தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இவ்விரு பதவிகளையும் உடனடியாக நியமிப்பதுசாத்தியமில்லை என்று பொதுச்சபையில் கருத்து நிலவியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### ஆயிரத்து - - -

கோணமலையிலிருந்துஏற்றிக் கொண்டு மீண்டும் இன்று இரவு காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும் லங்கா முடித்த நாளை கங்கேசன் துறையை வந்தடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது, (ந)

### அரசு - - -

துள்ளதாவது அரசு இராணுவத்தைப் பயன்படுத்தி மக்கள் வாழ்விடம், ஆலயங்கள் மற்றும் மக்களின் சொத்துக்களை அநியாயமான முறையில் அழித்துள்ளதை நாம் இந்த விஜயத்தின் போது பார்த்தோம் எனவும் கூறியுள்ளனர். யுத்தக் கைதிகளின் உறவினர்கள் முல்லைத்தீவின் சில பகுதிகளுக்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (வ-103)


## நன்றி கூறுகின்றோம்

கடந்த 16 வருடகாலமாக எமது சோலைபுரக் கிராம வீதிகள் மிகவும் சேதமடைந்து உடைவுற்ற நிலையில் இருந்தது. இதனால் இப் பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கினர். ஆனால் இரண்டாயிரம் ஆண்டில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் முன்வந்து எமது கிராம வீதிகளை புனரமைத்துத் தருகின்றார்கள்.

இதற்காக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா - வி. கே. ஜெகன் ஆகியோருக்கும் அக்கட்சியின் யாழ், மாவட்ட பிரதி அமைப்பாளர் நிசாந்தன், யாழ். மாநகரசபை உறுப்பினர் தோழர் றேகன் ஆகியோருக்கும் எமது ச. ச. நிலையத்தின் சார்பிலும் சோலைபுர மக்கள் சார்பிலும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகிகள்.

சோலைபுரம் கவிபாரதி சனசமூக நிலையம்

(00194)



ஸ்ரீ செல்வா

யாழ். ஸ்ரான்லி வீதி,

காலை 10-30 பி.ப 2.30

அர்ஜுன், ரம்பா நடித்த

'சுதந்திரம்'

(புதிய வெளியீடு)

CD பிரதி

(00115)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.